அடையாள இலக்கம்

B

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2017

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**அ). பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. நீ ______ நிறம்
2. தீபாவ ______
3. ஞாயிற்றுக்கி ______ மை
4. மி ______ வண்டி
5. சி ______ கம்
6. வ ______ துகை
7. மு ______ கோணம்
8. வாழைப் ______ ழம்
9. மாக் ______ லம்
10. தமி ______ ர் திருநாள்

10 புள்ளிகள்

**(ஆ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.**

1. நான் - ______________________
2. பூ - ______________________
3. நாய் - ______________________
4. புத்தகம் - ______________________
5. அவன் - ______________________

(10 புள்ளிகள்)

**(இ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.**

1. வருணி ____________________ பள்ளிக்குச் சென்றாள்.

   அ) அப்பாவுடன் ஆ) அப்பாவுக்கு

   இ) அப்பாவை ஈ) அப்பாவிடமிருந்து

2. என் ____________________ ஒரு நாய் இருக்கின்றது.

   அ) நண்பனை ஆ) நண்பனுக்கு

   இ) நண்பனிடம் ஈ) நண்பனைப்போல்

3. பழம் ____________________ இருக்கிறது.

   அ) மரம் ஆ) மரத்திற்கு

   இ) மரத்திலிருந்து ஈ) மரத்தில்

4. நல்ல ____________________ ஆசிரியர் பாராட்டினார்.

   அ) பிள்ளைகளை ஆ) பிள்ளைகளுக்கு

   இ) பிள்ளைகளின் ஈ) பிள்ளைகளே!

5. என் ____________________ மாம்பழம் என்றால் மிகவும் விருப்பம்.

   அ) அண்ணாவுடைய ஆ) அண்ணாவிற்கு

   இ) அண்ணாவை ஈ) அண்ணாமேல்

(10 புள்ளிகள்)

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. **<u>குருடர்கள்</u>** வெள்ளைக்கோலுடன் நடக்கும் போது வழிவிட்டு உதவவேண்டும்.

   அ) காது கேளாதவர்கள் ஆ) கண் தெரியாதவர்கள்

   இ) வாய் பேசமுடியாதவர்கள் ஈ) கால் முடமானவர்கள்

2. **<u>சூரியன்</u>** காலையில் கிழக்கில் உதிக்கும்.

   அ) ஞாயிறு ஆ) திங்கள்

   இ) நட்சத்திரம் ஈ) தாரகை

3. **<u>முதியவர்களின்</u>** அனுபவத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளுதல் நன்று.

   அ) வயோதிபர்களின் ஆ) இளையர்களின்

   இ) குழந்தைகளின் ஈ) நண்பர்களின்

4. என் அம்மா ஆசிரியராகத் **<u>தொழில்</u>** செய்கிறார்.

   அ) வேலை ஆ) குரு

   இ) பள்ளிக்கூடம் ஈ) புத்தகம்

5. தைப்பொங்கலை உறவினர்களுடன் எமது **<u>இல்லத்தில்</u>** மகிழ்வாகக் கொண்டாடினோம்

   அ) அறையில் ஆ) மண்டபத்தில்

   இ) வீட்டில் ஈ) கோயிலில்

(15 புள்ளிகள்)

**(உ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. அப்பா நேற்றுக் கடைக்குப் **போனார்.**

   அப்பா நாளை கடைக்குப் ______________________________.

2. நான் நண்பனுடன் நாளை கடற்கரையில் **நீந்துவேன்.**

   என் அண்ணண் நேற்று நீச்சல் குளத்தில் ___________________________.

3. நான் இப்பொழுது நடனம் **கற்கிறேன்.**

   என் தோழியும் இப்பொழுது நடனம் ________________________________.

4. சென்ற வருடம் கணித பாடத்தில் அதிக புள்ளிகள் **பெற்றேன்.**

   அடுத்த வருடமும் நான் கணித பாடத்தில் அதிக புள்ளிகள்

   __________________________.

5. சிறுவர்கள் கட்டிய மணல் வீடு நீரில் **கரைந்தது.**

   இப்பொழுது தட்டில் இருக்கும் ஐஸ்கட்டிகள் ________________________.

(15 புள்ளிகள்)

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேரிந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையை பூர்த்தி செய்க.**

| | | | |
|---|---|---|---|
| **தொப்பிகளைப்** | **ஓய்வு** | **கழற்றி** | **தேடினான்** |
| **தந்திரம்** | **தொப்பியை** | **வெறுமையாக** | |
| **பார்த்தான்** | **விழித்து** | **நித்திரையாகி** | |

ஒரு தொப்பி வியாபாரி தொப்பிகளை வீடு வீடாகச் சென்று விற்று வந்தான். ஓருநாள் அவன் ________________(1) எடுப்பதற்காக, ஒரு மரத்தின் அடியில் அமர்ந்தான். சிறிது நேரத்தில் ______________(2) விட்டான். தொப்பிகளைத் தலைப்பக்கம் ஒரு கூடையில் வைத்திருந்தான். மேலே மரத்தில் இருந்த குரங்குகள் இதனைக் கவனித்தன. அக்குரங்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ________________(3) எடுத்து அணிந்து கொண்டு மீண்டும் மரத்தில் ஏறிக்கொண்டன.

சிறிது நேரத்தில் வியாபாரி ________________(4) எழுந்தான். கூடை ________________(5) இருப்பதைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். அங்குமிங்கும் _______________ (6). மேலே மரத்தைப் ________________ (7), நடந்ததை அறிந்தான், ஒரு ________________(8) செய்தான்.

தன் தலையிலிருந்த தொப்பியை ________________(9) கீழே வீசினான். அதனைப்பார்த்ததும் குரங்குகளும் அது போலவே தம் தலையிலிருந்த தொப்பிகளை எடுத்துக் கீழே வீசின. குரங்குகளுக்கு இது வழக்கம் தான். மற்றவர்கள் செய்யும் செயலைப் பார்த்து தாமும் அப்படியே செய்யும். வியாபாரி உடனே ________________(10) பொறுக்கி எடுத்துக் கொண்டான்.

(20 புள்ளிகள்)

**(எ) கீழேயுள்ள படத்தொடரைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி தரப்பட்ட ஐந்து (5) சொற்களுக்கு பொருத்தமான வசனங்களை எழுதுக.**

## தீய பழக்கம்



1. எறிந்தான்:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

2. மூதாட்டி:

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**2.** வழுக்கி:

**3.** வலி:

**4.** வழிபோக்கர்:

(20 புள்ளிகள்)